**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, DINDIGUL.**
**Date : 20.07.2026.**
**MACOP.No.100/2012**
**ம.சா. 1 திரு.சேகுராஜன், த/பெ. கருப்பையா.**

**முதல் விசாரணை தொடர்ச்சி :-**

விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் **ம.சா.ஆ.1**. எனது Discharge Summary **ம.சா.ஆ.2**. எனது சிகிச்சை அளித்த மருத்துவர் வழங்கிய சான்று **ம.சா.ஆ.3**. எனது காயங்களுக்கு எடுக்கப்பட்ட நுண்கதிர் படங்கள் (எண்ணிக்கை - 2) **ம.சா.ஆ.4**. 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பதிவுச் சான்றிதழின் ஒளிநகல் **ம.சா.ஆ.5**. மேற்படி வாகனத்தின் காப்பீட்டு ஒளிநகல் **ம.சா.ஆ.6**. 1-ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் ஒளிநகல் **ம.சா.ஆ.7**. எனது ஆதார் அட்டையின் ஒளிநகல்(அசலுடன் சரிபாக்கப்பட்டது) **ம.சா.ஆ.8**. எனது வங்கி கணக்குப்புத்தகத்தின் ஒளிநகல் **ம.சா.ஆ.9**. மாவட்ட மருத்துவ குழுவில் இருந்து வழங்கப்பட்ட எனது ஊனச்சான்று **நீதிமன்ற சான்றாவணம் - 1.**

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எனது வயது, வேலை, வருமானத்தைக் காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்மீது மோதிய வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.6 காப்பீட்டு ஆவணம் போலியானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள TN 04 K8222 வாகனத்தின் காப்பீடு பதிவு 13.09.2011ல் இருந்து தான் 2-வது எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றும், ம.சா.ஆ.6 ஆவணத்தில் 13.05.2011 முதல்

காப்பீடு செய்யப்பட்டதுபோல் போலியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண்.TN 04 K 8822 என்று தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று எதன் அடிப்படையில் கூறுகிறேன் என்றால் போலீசார் தான் கூறினார்கள். விபத்து தேதியில் விபத்து ஏற்படுத்திய வாகனத்திற்கும், 2–ம் எதிர்மனுதாரருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், எனவே 2–எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை.**

Signature of the deponent

**Taken down by me/before me in open court on 20.07.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

INBAKARTHICK Digitally signed by INBAKARTHICK Date: 2026.07.20 18:16:01 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**